**மாத்தறை மாநகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி சபையின் மாநகர முதல்வர் உட்பட அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, மாத்தறை மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 804,233 தொகைக்கான பேல் இயந்திரத்தின் பெறுமதி மற்றும் கணினி மற்றும் 06 துணைக் கருவிகளின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து, மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியம் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 2,723,314 தொகை மிகையாக செய்யப்பட்டிருந்தது.

(இ) பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 486,293 தொகை மிகையாகவும் மற்றும் மேலும் 02 நிர்மாண வேலைகளுக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 1,567,144 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து பூர்த்தி செய்திருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 17,817,976 இற்கான தொகை கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நேர்க்கூலி அடிப்படையில் நிறைவேற்றியிருந்த ரூபா 1,136,291 தொகைக்கான 05 நிர்மாண வேலைகளுக்கான பண்டங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 800,400 தொகையான கணக்காய்வுக் கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணம் என்பவற்றிற்காக கணக்குகளில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 44,690,057 தொகையான பங்களிப்பு தொகை தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 1,073,675 இற்கான கடன் தவணைப் பணத்தில் உள்ளடங்கியுள்ள ரூபா 817,221 இற்கான கடன் வட்டியின் பெறுமதியினை கடன் தொகையில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிலையான சொத்துகள் கருவிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய பண்டங்கள் கொள்வனவு செய்த வகையில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,519,654 தொகையான பண்டங்கள் வழங்கல் பெறுமதி கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஒ) முன்னைய ஆண்டு தொடர்பாக பெறவேண்டிய பெறுமதி கூட்டியவரி ரூபா 1,984,740 தொகை வரித்தொகை குறுக்கு பதிவுகளின் மூலம் சீராக்கல்

செய்த போது மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளும் செலுத்தியிருந்த போதிலும் ரூபா 1,782,386 இற்கான தொகையொன்று செலுத்த வேண்டியவை என பலவின வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது பண்ட ஏல விற்பனவின் போது அகற்றப்பட்டிருந்த 37 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக அவற்றை இனங்கண்டு பெறுமதியினை கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

---------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 60,922,297 தொகையான 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப்பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 30,236,500 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------------------------------------

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 278,891,530 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 8,378,918 தொகைக்கான 18 மீதிகள் அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 119,776,120 தொகையான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 93,378,501 தொகைக்கான 18 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு மீதியில் தேர்தல் முற்பணங்களில் அடங்கியுள்ள செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பாக ரூபா 852,341 தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 198,524,830 தொகையான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 254(அ) | சபைக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து வரிகள், தண்டப்பணம், தண்டம் ஒன்றான கொடுப்பனவு என்பனவற்றை அறவீடு செய்து அந்தப் பணத்தை மாநகர சபையின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனினும், முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 394,501,983 இற்கான நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாசம் xi இன் பந்திகள் 21.11 மற்றும் 22.04 | சபையில் கடமையாற்றும் 122 உத்தியோகத்தர்கள் / ஊழயர்களின் சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பள விடுமுறைகள் தொடர்பான மாதாந்த அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 102 முதல் 110 வரை | காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்து உரிய அறிக்கை கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 1645 மற்றும் 1646 | 2018 ஜுன் 13 திகதி அளவிலும் மாநகர சபையின் 81 வாகனங்கள் தொடர்பான ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள், துனைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு 2003 ஆண்டு முதல் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பொதுநிதி சுற்றறிக்கை | |
| (i) 2014 திசெம்பர் 30 திகதிய 2014/3(i) சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு பொருத்தமற்ற வகையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக ரூபா 35,000 இற்கான தொலைபேசி படி ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2015 ஜுலை 10 ஆம் திகதிய 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க |

| | |
|---|---|
| | வேண்டுமெனினும், பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 11,278,000 தொகை பெறுமதியான 09 வாகனங்கள் தொடர்பாக 2018 ஜூன் 02 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றிக்கை | அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், மாநகர சபைக்குச் சொந்தமான 92 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 157,500,775 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 116,367,859 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

-------------------------

நடைமுறை சொத்துக்களின் கீழ், கொள்ளை அடிக்கப்பட்ட பணக்கணக்கின் மீதியை உட்படுத்தி காட்டியிருந்தமையால், நடைமுறை சொத்துக்களில் ரூபா 169,360 இற்கான போலியான சொத்துக்கள் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட பணத்தை கொள்ளை அடித்தல் தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

-------------------------------

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 37,073,065 | 38,595,208 | 35,948,877 | 60,368,667 | 42,000,100 | 38,286,323 | 39,997,350 | 57,722,336 |
| வாடகை | 27,671,963 | 28,038,858 | 26,065,886 | 63,668,754 | 18,762,300 | 25,509,278 | 20,729,916 | 61,695,782 |
| அனுமதிப் பத்திர கட்டணம் | 18,802,100 | 27,103,901 | 24,440,033 | 14,151,953 | 15,310,100 | 17,937,208 | 18,002,208 | 11,488,085 |
| ஏனைய வரு மானங்கள் | 142,574,400 | 169,049,081 | 103,044,750 | 256,312,609 | 178,914,600 | 145,521,560 | 78,606,299 | 190,308,278 |
| மொத்தம் | 226,121,528 | 262,787,048 | 189,499,546 | 394,501,983 | 254,987,100 | 227,254,369 | 157,335,773 | 321,214,481 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 226,121,528 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 321,214,481 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 262,787,048 தொகையுடன் ரூபா 584,001,528 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் மொத்த அறவீடுகள் ரூபா 189,499,546 தொகையான காணப்பட்டமையினால், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 394,501,983 ஆக காணப்பட்டது. நிலுவை வருமானங்களில் இருந்து அறவீடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் எழுத்தானை கட்டணம் மற்றும் தண்டங்களில் வழக்கு தாக்கல் செய்து அறவிடப்பட வேண்டிய மீதி வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கான மற்றும் முன்னர் ஆண்டிற்கான நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

---

ஆரம்ப நிலுவை ரூபா 57,177,599 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 34,017,144 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 91,194,743 தொகை அறவிட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 31,255,650 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 59,939,093 தொகை அளவான இந்த நிலுவைத் தொகையில் ரூபா 10,000 இனை விட மிகையான நிலுவை மீதிகள் காணப்பட்ட 759 அலகுகளின் மூலம் ரூபா 26,129,098 இற்காக தொகையொன்று நிலுவையாக காணப்பட்டது.

**(ஆ) களியாட்ட வரி**

---

ஆரம்ப நிலுவைக் களியாட்ட வரி மீதி ரூபா 544,737 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 4,578,063 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,122,800 தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 4,693,226 ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் ரூபா 429,574 தொகை ஒன்று நிலுயையாகக் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

**-----------**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆரம்ப நிலுவை ரூபா 61,695,782 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 28,038,858 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 89,734,640 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 26,065,886 ஆகக் காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 63,668,754 தொகை அளவு கூடிய பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது.

(ii) சபைக்கு சொந்தமான வாடகைக்கு கொடுத்திருந்த 19 நிறுவனங்களில் மற்றும் 21 இடங்களில் இருந்து நில வாடகையாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 51,759,550 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவற்றில் கொடுவேகொட 68 கடைகளுக்காக உடன்படிக்கை கையொப்பமிட்டிருக்காமையினால் நிலுவை தொகையை அறவீடு செய்வதில் ஆபத்து ஒன்று காணப்பட்டது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**-----------------------------------------**

**(அ) வர்த்தக அனுமதிப்பத்திரம்**

**---------------------------------------------**

ஆரம்ப நிலுவை ரூபா 5,938,895 ஆக காணப்பட்டதுடன் ரூபா 9,234,970 ஆகிய ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 15,173,865 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 8,692,170 தொகை ஆகக் காணப்படாமையினால், கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வழக்கு தாக்கல் செய்துள்ள வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணக் கணக்கின் பிரகாரம் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,481,695 தொகை அளவான உயர்ந்த பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்தது.

**(ஆ) விளம்பரப் பலகை கட்டணம்**

**---------------------------------------------------**

ஆரம்ப நிலுவை ரூபா 5,549,190 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 16,565,251 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 22,114,441 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 14,444,183

தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 7,670,258 தொகை அளவான உயர்ந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ஆக ரூபா 308,840 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ஆக ரூபா 253,033,985 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

(i) மாநாகர சபை கட்டளைச் சட்டத்தில் 272 ஆம் பிரிவின் கீழ் 32 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 03 பிரதான மற்றும் துணை விடயங்களுக்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவல்லை.

(ii) ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தொடர்பாக முறைசார் விதமாக செயற்பட்டிருக்கவில்லை.

- பாதைகளுக்கு கழிவு நீர் அகற்றுதல்.
- மீன் வியாபார ஒவ்வொரு இடத்திலும் மேற்கொள்ளப்படல்.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------

துணை விதிகள் மூலம் ஆக்கப்பட்டிருந்த செய்பணிகள் மீது 2017 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கிய, சபை நிதியத்தின் மூலம் செயற்படுத்த இருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 29,323,135 தொகையான 21 அபிவிருத்தி திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்கப்பட்ட வெளியீடுகள் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

------------------------------------------------------------------------------------------------

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 06 பல்வேறு செய்பணிகளில் நிறைவேற்றுவதற்காக ரூபா 695,738 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த விளைவு மட்டத்தை (output) பெற்றிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (out come) பெற்றுக்கொள்ளாமை**

--------------------------------------------------------------------------------------------

தென் மாகாண சபை அபிவிருத்தித் திட்டம் - 2017 மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மாணியத்தின் கீழ் மற்றும் சபை நிதியத்தின் கீழ் குமாரதுங்க முனிதாச நூலகம் இலத்திரனியல் நூலகமொன்றாக மாற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் இருந்து ரூபா 10,025,000 இற்கான 07 கணினிகள் மாத்திரம் கொள்வனவு செய்து அவற்றில் இரண்டு வேறு பிரிவு ஒன்றிற்கு வழங்கியிருந்ததுடன், குறிப்பிட்ட செயற்திட்டத்தை செயற்படுத்தாமையினால் எதிர்பார்த்த பயன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(உ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

--------------------------------------

குப்பை முகாமைத்துவத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாடுகளின் கீழ் உயிர்வாயு அலகு ஒன்று நிர்மாணிப்பதற்காக கடந்த ஆண்டு இறுதி அளவில் ரூபா 6,435,644 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஜூன் 12 திகதி அளவில் எதிர்பார்த்த் விளைவுகள் பெற்றுக் கொள்ளாமல் கைவிடப்பட்டிருந்தது.

**(ஊ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

------------------------------------------------------------

அண்மித்த 5 ஆண்டுகளில் குப்பை சேகரிக்கப்பதற்காக ரூபா 442,188,985 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், சேகரிக்கப்பட்ட குப்பைகளில் மீள் சுழற்சி செய்ய முடியாத குப்பைகள் 90 சதவீதம் முறைசாராத விதமாக

குப்பைகள் குவிக்கப்படுவதனால் குப்பை மலை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. முறைசாரா விதவமாக குப்பைகள் குவிக்கப்படுவதால் பொதுமக்களுக்கு பீடைகள் ஏற்படுவதினால் பொலிஸினால் நீதிமன்றத்தில் வழக்கத் தாக்கல் செய்தல் மேற்கொள்ளப்பபட்டிருந்தது. எனினும், குப்பை முகாமைத்துவத்திற்காக சபையினால் முறையான வேலைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 27 மற்றும் 1597/08 இலக்கம் கொண்ட வர்த்தமானியில் 05 பந்திக்கு இணங்காமல் பயன்படுத்துவதை மாற்றியிருந்த 29 வாகன தரிப்பிடங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 14,500,000 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 27 மற்றும் 1597/08 கொண்ட வர்த்தமானியின் 6(ii) பந்திக்கு இணங்காத முறையில் நகர சபையின் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த கோட்டை சட்டத்தரணிகள் அலுவலக தொடர் கட்டிடத்திற்காக ரூபா 1,250,600 தொகை மற்றும் வரைபுக்கு இணங்காத முறையில் நிர்மாணித்திருக்காத 02 கட்டிட விண்ணப்பங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 7,996,000 இற்கான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நகரசபை நிருவாகத்தில் உள்ள 4,000 சதுரமீற்றரை விட குறைவாக நிர்மாணிக்கப்பட்டிருந்த அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலை ஒன்றிற்காக தண்டப்பணம் அறவீடு செய்தல் மற்றும் முறையான நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 திகதிக்கு அண்மித்த 03 வருடங்களில் மாநகர சபையின் தீ அணைக்கும் அலகினால் 166 தீ பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்ததுடன், 2015 மற்றும் 2016 ஆண்டு தொடர்பாக வழங்கியிருந்த 107 தீ பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் 2017 ஆம் ஆண்டிற்காக புதுப்பபடுத்தியிருக்காமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(உ) பொல்ஹேன சாகரசெவன பொது வசதிகள் நிலையத்தில் பொது மலசலகூடத்தின் திருத்த வேலை மேற்கொள்ளலில் தாமதம் ஏற்பட்டதன் காரணத்தினால், 2017 ஆண்டிற்காக வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு கொடுக்கமுடியாமையால் ரூபா 502,063 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடத்தின் கட்டணம் வெளித்தரப்பினால் அறவிடப்பட்டிருந்ததுடன், சபை இது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்றை அணுகியிருக்கவில்லை. 2016 ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய ரூபா 277,833 இற்கான தொகையும் கிடைத்திருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்

(i) 2014 நவம்பர் 12 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு இணங்காத முறையில் 104 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் மேலதிக நேரவேலை கொடுப்பனவு என ரூபா 30,486,713 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது.

(ii) மிகை ஊழியர் எண்ணிக்கை ஒன்று இருக்கும் போது தொழிலாளர்களை முறைப்படி ஈடுபடுத்தலை போலவே கடமைகளை மேற்பார்வை செய்தல் உரிய முறைப்படி நடைபெற்றிருக்கவில்லை.

### (ஆ) பதில் கடமை நியமனம்

மாத்தறை மாநகர சபையின் தீ அணைக்கும் அலகில் நிலைய பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் அலுவலர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2012 ஆகஸ்ட் 02 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,012,500 இற்கான தொகையொன்று படியாக செலுத்தப்பட்டிருந்தது.

### (இ) பதவியணிக் கடன்

மீளாய்வாண்டு இறுதி அளவில் 10 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றிருந்த, இறந்துள்ள, சேவையை விட்டு சென்றுள்ள, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஊழியர்களின் இடர் கடன், விழா முற்பணம், விஷேட கடன், மோட்டார்

வாகனக் கடன் மற்றும் வெள்ள முற்பணம் ஆக வழங்கியிருந்த கடன் தொகைகளில் ரூபா 459,687 இற்கான தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 வீடமைப்புத் திட்டங்களை சேர்ந்த 154 ஆதனங்களில் இருந்து 3 வருடங்கள் முதல் 33 வருட காலம் தொடர்பாக நிலுவை நிலவாடகை அறவிடப்படாமல் காணப்பட்டதுடன், இந்த வாடகையாளர்களில் உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. சபை அனுமதி இன்றி ஆவனங்களை விற்பனை செய்தல், பறிமாற்றம் செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சபை அதற்காகக் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2014 அக்தோபர் 15 ஆம் திகதிய 03/2015 இன் இலக்க பிரதான செயலாளரின் (நிதி) சுற்றறிக்கை பிரகாரம் ரூபா 2,225,390 தொகை மதிப்பீட்டு பெறுமதியை உடைய நிர்மாண வேலை ஒன்றிற்கான பொருட்கள் மற்றும் கூலிக்கான கிரய மதிப்பீடு தயாரித்திருக்காததுடன் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த அடிப்படையில் மேற்கொள்வதற்காக சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(i) ரூபா 2,114,382 மதிப்பீட்டு பெறுமதிக்கு நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலை தொடர்பாக செலவு அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை.

(ii) நேர்க்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைக்காக 11 பண்ட விடயங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,066,830 தொகை செலவிடப்படும் அவற்றில் ரூபா 3,783,162 இற்கான பண்டங்கள் வழங்கியிருந்த போதிலும், ரூபா 1,905,929 இற்கான பண்டங்கள் எந்த நிர்மாண வேலைக்காக வழங்கப்பட்டது என்பது தொடர்பாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

மாநகர சபைக்கு சொந்தமான 6 ஆதனங்கள் தனியார் வீடுகள் கட்டுவதற்கு மற்றும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.5.2 விளைவற்ற / குறை பயன்பாடு சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

மார்கட் பாதையில் சிதைவுற்று காணப்பட்ட 81 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையக் கட்டிடத்தை திருத்த வேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமான ஒரு விடயத்தில் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

**(ஆ) வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்**

ரூபா 26,192,856 தொகை பெறுமதியான மற்றும் 05 இயந்திரங்கள் விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**3.5.3 வருடாந்த பண்ட / இருப்பு கணிப்பீடு**

2016 ஆண்டிற்கான மாநகர சபையின் பண்டக் கணிப்பீட்டின் மூலம் குறைவு எனக் காட்டியிருந்த 09 பிரிவுகளைச் சேர்ந்த 282 பண்ட அலகுகள் 2017 ஆண்டின் பண்டங்களில் அடங்கியுள்ளது என காட்டப்பட்டிருந்தது. 2016 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டிற்காக நாள் சம்பளமாக 768 மனித நாட்களும் மற்றும் 200 மணித்தியாளம் மேலதிக நேரப் படியாகவும் ரூபா 559,219 தொகை செலுத்தியிருந்த போதிலும் பண்டக் கணிப்பீடு முறைசார் விதமாக நடைபெற்றிருக்காததுடன், பண்டக் கணிப்பீட்டுக்காக செலுத்தப்பட்ட பணம் பலனற்ற செலவு ஒன்றாகியுள்ளது.

**3.5.4 வாகனப் பாவனை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் சுகாதாரத் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட 42 வாகனங்களுக்காக 2017 ஆண்டின் போது ரூபா 7,901,059 தொகை எரிபொருள்

செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த 42 வாகனங்களில் 21 வாகனங்கள் மைல் மீற்றர்களின் வாசிப்பின் படி எரிபொருள் சமப்படுத்தப்படாமல் டீசல் 27,017 லீற்றர்கள் மற்றும் பெற்றோல் 1,816 லீற்றர்கள் வழங்குவதற்காக ரூபா 2,779,087 இற்கான தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பக்கோ லோடரின் பழுது பார்த்தல் செலவு மற்றும் எரிபொருள் செலவுகளுக்காக ரூபா 2,996,260 தொகை செலவிடப்பட்டிருந்தது. வாகனம் ஓட்டப்பட்ட காலம் தெளிவாக பதிவு செய்திருக்காததுடன் வாகனம் வேலை செய்த காலம் மற்றும் சபைக்கு வருவதற்கும் செல்வதற்கும் செலவிடப்பட்ட காலத்தை விட மேலதிகமாக சில மணித்தியாளங்கள் எதுவித கருமங்களுக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 3.6 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகள் தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் தருவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் வார நாட்களில் கடமையாற்றியதற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் viii ஆம் அத்தியாயம் 3.2 பிரிவிற்கு இணங்காமல் ரூபா 509,219 இற்கான தொகை விடுமுறை நாள் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக புகைப் பிடிப்பதற்காக மாநகர சபையினால் எரிபொருள்களுக்காக ரூபா 1,539,096 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட இடம் அல்லது நோயாளிகள் காணப்படும் இடம் குறிப்பிடப்படாமல் புகைபிடிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 1,215,882 தொகையாகக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 311,140 இற்கான தொகையினால் புகைபிடிக்கப்பட்ட இடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

மாத்தறை பஸ் தரிப்பு நிலையத்தில் காணப்படும் மலசலகூடத்தின் திருத்த வேலைகள் குறிப்பிட்ட திகதியில் மேற்கொள்ளப்படாமை மற்றும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யபடப்பட்ட பின்னர் உரிய முறையில் வாடகையாளர்களுக்கு

ஒப்படைக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 689,664 இற்கான வருமானமொன்றினை சபை இழந்திருந்தது.

### 3.8 தோற்றக்கூடிய முறைகேடுகள்

தீ அணைக்கும் அலகை சேர்ந்த இரண்டு உத்தியோத்தர்களினால் மாத்தறை மாநகர சபையின் அங்கீகாரம் ஏதும் இன்றி கடமை நேரத்தில் மற்றும் கடமை நேரத்திற்கு வெளியே வேறு நிறுவனங்களில் தீ அணைக்கும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்த ரூபா 412,500 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்தது. அந்த நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்காக மாநகர சபையின் கடிதத் தலைப்பு மற்றும் தீ அணைக்கும் அலகின் நலன்புரி சங்கத்தின் கடிதத் தலைப்பு என்பன பயன்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.9 ஒப்பந்த வேலை நிருவாகம்

மாத்தறை வல்கம வடக்கு கிங்ஸ் காடன் பாதை மற்றும் வடிகால் முறையை நிர்மாணிக்கும் நிர்மாண வேலை ரூபா 992,448 இற்கான தொகைக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 295,432 தொகை பெறுமதியான உடன்பட்டிருந்த 07 வேலைப் பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. வடிகால் முறைமை நிர்மாணித்தல் தொடர்பாக மொத்த வரைபு மற்றும் அளவை எடுக்கப்பட்ட முறைகள் என்பன மதிப்பீட்டுடன் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 76,303,081 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 05 சதவீதம் முதல் 61 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) செலவு விடயம் ஒன்றில் ரூபா 990,251 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி 48 சதவீதமாக காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 37,238,737 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

--------------------------------

மாநகர சபையின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகிற்கு போதியளவு எண்ணிக்கையின் உத்தியோகத்தர்களை இணைத்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 தீர்க்கப்பட்டிருக்காத அவதானிப்புக்கள்**

-----------------------------------------------------

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1984 நவம்பர் 20 திகதிய 1984.׃.19 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 8.1 இனை தவறான விதத்தில் விளக்கமெடுத்து முத்திரைக் கட்டண வருமானம் சேகரிப்பதற்காக மாநகர சபை உத்தியோகத்தர்கள் 11 பேருக்கு ரூபா 1,365,965 இற்கான கமிஷன் செலுத்தப்பட்டிருத்தல்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை களியாட்டவரி அறவிடப்பட்டிருக்காமை.

(இ) நொத்தரிசு கடைகளில் இருந்து வாடகை அறவிடப்படாமை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

--------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வாகனக் கட்டுப்பாடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) கணக்கீடு
(உ) பதவியணி முகாமைத்துவம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(எ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஏ) ஒப்பந்த வேலை நிருவாகம்